செ.வெ.எண்:34 நாள்:30.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம், நீலகிரி மாவட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து வங்கிகளின் மூலம் கடன் இணைப்பு, பணிக்கு செல்லும் மகளிருக்கு இரு சக்கர வாகன மான்யம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் திறன் பயிற்சி வழங்குதல், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் மூலம் நலிவுற்றோர், மாற்று திறனாளிகள் மற்றும் மிகவும் ஏழை மக்களுக்கு சிறு தொழில் செய்ய தனிநபர் கடன் வழங்கும் பணிகள் செய்து வருகிறது.

கொரோனா வைரஸ் தடுப்பு பாதிப்பினால் பொருளாதார தேக்க நிலை ஏற்பட்டு பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறுவியாபாரிகள், தினசரி வேலைக்கு செல்பவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், டேக்சி ஓட்டுநர்கள், லாரி ஓட்டுநகர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் சாலையோர வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை கருதி இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து அதன் மூலம் வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டிக்கு கடன் இணைப்பு ஏற்படுத்தும் நோக்கில் இளைஞர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்த தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

மேலும், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஒத்ததொழில் குழுக்களுக்கும் ஊரகப் பகுதிகளில் தொழில் முனைய ஆர்வமுள்ளவர்களுக்கு நிதி உதவி செய்யவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஏற்கனவே மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள குழுக்கள் மீண்டும் குறைந்த வட்டியில் கடன் இணைப்பு பெற தர மதிப்பீடு செய்து வருவதால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உடனடியாக களப்பணியாளர்கள் மூலம் தர மதிப்பீடு செய்து கடன் விண்ணப்பத்தினை வங்கிகளுக்கு செலுத்திட ஏற்பாடு செய்து வருகிறது.

ஆகவே, புதியதாக இளைஞர்கள் சுய உதவிக் குழுக்களில் சேர சிறு வியபாரிகள், ஆட்டோ, டேக்ஸி, லாரி போன்ற வாகன ஓட்டுநகர்கள், சாலையோர வியாபாரிகள் கீழ் கண்ட அலுவலகத்தை அணுகி பயன் பெருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

28/4/2020 (Asst)

**தொடர்புக்கு**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
பிங்கர் போஸ்ட், உதகை.

| | |
|---|---|
| தொலைபேசி எண் | : 0423 2444430 |
| ஊரகப் பகுதி | : 9444094317 |
| நகர்ப்புற பகுதி | : 9444094316 |